1. நகரமன்ற தீர்மானம் எண்:558 நாள்:07.03.2019-ன் படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கொசு புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள கால்வாயில் மருந்து தெளிப்பதற்கு தெளிப்பான்கள் (SPRAY) சப்ளை செய்யும் பணிக்கு 13.03.2019 தேதியன்று வரபெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கிரீன் சொசியாலிட்டி | 12960.00 |
| 2 | பநீ சீனிவாசா எண்டர்பிரைஸஸ் | 13150.00 |
| 3 | பநீ சாய் ஏஜென்சிஸ் | 13100.00 |

அ. கு :1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்: 1ல் உள்ள கிரீன் சொசியாலிட்டி குறைவாக கொடுத்துள்ள விலைபுள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை உடனடியாக செய்து முடிக்கவேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க எண் : 228/2019/எச்1**

2. நகரமன்ற தீர்மானம் எண்:557 நாள்:07.03.2019-ன்படி இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிவறை தொட்டி சுத்தம் செய்யும் பணிக்கு கீழ் காணும் செப்டிக்டேங்க் கிளினீங் உரிமையாளர்களிடமிருந்து 13.03.2019 தேதியன்று வரபெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஈஸ்வரி செப்டிக் டேங்க கிளினீங் | 34000.00 |
| 2 | ரக்ஷனா செப்டிக் டேங்க கிளினீங | 31000.00 |
| 3 | ஜெயசுதா செப்டிக் டேங்க கிளினீங | 29500.00 |

அ. கு :1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்: 3ல் உள்ள ஜெயசுதா செப்டிக் டேங்க கிளினீங் உரிமையாளர் குறைவாக கொடுத்துள்ள விலைபுள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை உடனடியாக செய்து முடிக்கவேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க எண் : 228/2019/எச்1**

3. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு மறுவரையறை செய்யப்பட்டு தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய வார்டுகளுக்கேற்ப வாக்கு சாவடி மையங்கள் அமைத்திடுமாறு செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.311/2019/ஊ.தே, நாள்:09.02.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி உரிமம் பெற்ற கட்டிட படவரைவாளர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று தயார் செய்திடவும், அதற்கான தோரய செலவீனத் தொகை ரூ.50,000/-ஐ மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவீனத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:216/2019/எப்1**

4. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு மறுவரையறை செய்து முடிக்கப்பட்ட பின்னர் அதனடிப்படையில் வாக்கு சாவடி மைங்கள் அமைத்திட, வாக்குச்சாவடி மையம் அளவீடு செய்து ஆட்டோ கேட் (Auto cadd)-ல் வரைபடம் தயார் செய்து Book let செய்து தரக்கோரியுள்ளதற்கு கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் (ம) விலாசம் | பொருட்கள் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.மனோகரன்<br>கட்டிட பட வரைவாளர்,<br>43, தருமர் தெரு,<br>நியுடவுன், வாணியம்பாடி. | 1) வாக்கு சாவடி மையம் அளவீடு செய்து Auto cadd-ல் படம் வரைந்து வழங்கிட 1-க்கு<br>2) புக்லெட் தயார் செய்திட 1 செட்ற்கு. | ரூ.230/-<br>ரூ.150/- |
| 2 | திருமதி.டி.மாலா மார்கிரேட்,<br>கட்டிட பட வரைவாளர்,<br>7/163, புதுத் தெரு,<br>பெருமாள்பேட்டை,வாணியம்பாடி | 3) வாக்கு சாவடி மையம் அளவீடு செய்து Auto cadd-ல் படம் வரைந்து வழங்கிட 1-க்கு<br>4) புக்லெட் தயார் செய்திட 1 செட்ற்கு. | ரூ.250/-<br>ரூ.170/- |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர் நோக்கி குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஜி.மனோகரன், கட்டிட பட வரைவாளர், வாணியம்பாடி அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:216/2019/எப்1**

5. நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை-5 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள்:21.09.2009 மற்றும் அரசாணை எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:12.07.200-ன்படி, ஒவ்வொரு நிதியாண்டிற்கும் புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு சாலை சீரமைப்பு கட்டணம் 5% மற்றும் மேற்பார்வை கட்டணம் 20% வசூல் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது.

அதன்படி 2019-2020-ம் நிதியாண்டில் கீழ்காணும் விவரப்படி சாலை இணைப்பு கட்டணம் 5% மற்றும் மேற்பார்வை கட்டணத்தில் 20% சதவிகிதம் உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**வீட்டு முறை உபயோகத்திற்கான கட்டணம்**

| சாலையின் நீளம் மற்றும் தன்மை | | சாலை சீரமைப்பு கட்டணம் | மேற்பார்வை கட்டணம் |
|---|---|---|---|
| | | 2019-2020 | 2019-2020 |
| 0 முதல் 30 மீட்டர் வரை | கருங்கல் சாலை | ரூ.1710/- | ரூ.2400/- |
| | தார் சாலை | ரூ.3670/- | ரூ.2880/- |
| | சிமெண்ட் சாலை | ரூ.4240/- | ரூ.3000/- |
| 30 மீட்டர் முதல் 90 மீட்டர் வரை | கருங்கல் சாலை | ரூ.2690/- | ரூ.2520/- |
| | தார் சாலை | ரூ.4650/- | ரூ.3060/- |
| | சிமெண்ட் சாலை | ரூ.5180/- | ரூ.3180/- |

**வீட்டு முறையில்லாத உபயோகத்திற்கான கட்டணம்**

| சாலையின் நீளம் மற்றும் தன்மை | | சாலை சீரமைப்பு கட்டணம் | மேற்பார்வை கட்டணம |
|---|---|---|---|
| | | 2019-2020 | 2019-2020 |
| 0 முதல் 30 மீட்டர் வரை | கருங்கல் சாலை | ரூ.1710/- | ரூ.3420/- |
| | தார் சாலை | ரூ.3670/- | ரூ.3840/- |
| | சிமெண்ட் சாலை | ரூ.4240/- | ரூ.3960/- |
| 30 மீட்டர் முதல் 90 மீட்டர் வரை | கருங்கல் சாலை | ரூ.2690/- | ரூ.3600/- |
| | தார் சாலை | ரூ.4650/- | ரூ.2880/- |
| | சிமெண்ட் சாலை | ரூ.5180/- | ரூ.4200/- |

அ.கு: 1) புதிய குழாய் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து 2018-19-ம் ஆண்டின் வசூல் செய்யப்பட்டு வரும் கட்டணங்களில் 2019-2020-ம் நிதியாண்டில் சாலை சீரமைப்பு கட்டணம் 5% உயர்வு செய்தும் மற்றும் மேற்பார்வை கட்டணம் 20% உயர்வு செய்தும் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி 01.04.2019 முதல் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, உயர்வு செய்யப்பட்ட தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க எண் :2408/2015/இ2**

6. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, ஒருமுறை சிறப்பு நிதி ரூ.2000/- வழங்கும் திட்டம், மேற்படி திட்டத்திற்கு தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்யும் வகையில், உரிய விண்ணபங்கள் வழங்கப்பட்டு, அதனை திரும்பவும் பெறப்பட்டு, மேற்படி பணியில் ஈடுப்பட்ட நகராட்சி பணியாளர்களுக்கு 26.02.2019 முதல் 10.03.2019 வரையில் மதிய உணவு வழங்கப்பட்டது. மேற்படி உணவு வழங்கப்பட்ட ஸ்ரீ கணபதி மெஸ், வாணியம்பாடி அவர்களுக்கு செலவீனத் தொகை ரூ.36,400/-ஐ வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் ஒப்புதலை எதிர் நோக்கி ஸ்ரீ கணபதி மெஸ் அர்களுக்கு செலவீனத் தொகை ரூ.36400/-ஐ பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

**ந.க.எண்:248/2019/எப்1**

7. வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்ட கதவு எண்.14/1 ஆசிரியர் காலனி 3-வது தெரு காதர்பேட்டையில் வசிக்கும் திரு.T.S.முகமத் யூசுப் ஜமால் மற்றும் 17 குடியிருப்புதாரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் W.P.NO.9173/2019-ல் நகராட்சி மூலம் வசூலிக்கப்படும் சொத்துவரி அதிகமாக உயர்வு செய்யப்பட்டுள்ளது என நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக நடத்த திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன், அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம், சென்னை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கினை சென்னை உயர்நீதி மன்றத்தில் நடத்த ஏற்படும் வழக்கு கட்டணம் தோராய செலவினம் ரூ.50,000/-ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. அவசரம் அவசியம் கருதி நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை அனுமதிக்கலாம்

ந.க.எண்.494/2019/அ3

8. வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.76/2015, வாதிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றது. அதன்மீது வாதி நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு E.P.NO.55/2016 தொடுக்கப்பட்டதீன் பேரில், நகராட்சி சார்பில் நகரமன்ற வழக்கறிஞர் திரு.எம்.ஏசு அவர்கள் ஆஜராகி மேற்படி வழக்கினை 11.07.2018 அன்று நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்கின் கட்டணமாக சென்னை உயர்நீதிமன்ற C.A & I.A No.170/2017-ன் கட்டணம் ரூ.10000/- மற்றும் வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றம் E.P.NO.55/2016-ன் கட்டணம் ரூ.3000/- மொத்தம் செலவீனம் ரூ.13,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையினை நகரமன்ற வழக்கறிஞர் திரு.எம்.ஏசு அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1593/2015/எப்1**

9. வேலூர் 08, பாராளுமன்ற தேர்தலையொட்டி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி 100% வாக்கு பதிவு செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி சார்பில் தேர்தல் அழைப்பிதழ் மற்றும் டிஜிட்டல் பலகை 2.5"X5.00" என்ற அளவில் 6 எண்ணிகையில் Channel Prem அமைத்துக்கொடுக்க ஆகும் அதற்கான தோரய செலவீனத் தொகை ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஆகும் செலவீனத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1739/2019/எப்1**

10. வேலூர் 08, பாராளுமன்ற தேர்தலையொட்டி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி 100% வாக்கு பதிவு செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி சார்பில் தேர்தல் அழைப்பிதழ் 6000 எண்ணிக்கையில் மற்றும் டிஜிட்டல் பலகை 2.5"X5.00" என்ற அளவில் 6 எண்ணிகையில் Channel Prem அமைத்துக்கொடுக்க கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் (ம) விலாசம் | பொருட்கள் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சண்முகம்,<br>கே.கே.ஆர்.ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>10, பீ.ஜே.நேரு தெரு,<br>சி.எல்.ரோட், வாணியம்பாடி. | அழைப்பிதழ் 1000 எண்ணிக்கையில் மற்றும் டிஜிட்டல் பலகை 2.5"X5.00" என்ற அளவில் 1 எண்ணிகையில் | ரூ.3600/-<br>ரூ.1800/- |
| 2 | திரு.ஆர்.எஸ்.சேகர்,<br>செம்மொழி ஆப்செட்-அச்சகம்,<br>சி.எல்.ரோடு, வாணியம்பாடி. | அழைப்பிதழ் 1000 எண்ணிக்கையில் மற்றும் டிஜிட்டல் பலகை 2.5"X5.00" என்ற அளவில் 1 எண்ணிகையில | ரூ.3000/-<br>ரூ.1300 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர் நோக்கி குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள செம்மொழி அச்சகம், வாணியம்பாடி அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் பட்டியல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1739/2019/எப்1**

11. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி முஸ்லிம் பெண்கள் பள்ளியில் (வார்டு.23) மதிய சத்துணவு அமைப்பாளராக திருமதி.சோனியா என்பவரை பணி நியமனம் செய்யவில்லை என சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.NO.25270/2018-ல் 1-ம் பிரதிவாதியாக மாவட்ட ஆட்சியர், வேலூர் 2-ம் பிரதிவாதியாக ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி ஆகியோர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு சென்னை உயர்நீதி மன்ற அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.D.சூரியநாராயணன் அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் வழக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும் அதற்குண்டான செலவீனத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கம் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர் நோக்கி திரு.D.சூரியநாராயணன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/-ம் பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1996/2018/சி2

12. இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து 31.01.2015 ம் தேதி ஓய்வு பெற்ற திரு.ஆர்.விஜயக்குமார் என்பவர் தான் தொகுப்பூதியத்தில் (NMR) பணியாற்றிய காலத்தில் 50% பணி காலமாக சேர்க்க வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் நகராட்சி ஆணையருக்கெதிராக வழக்கு (W.P.NO.7986/2018 மற்றும் W.M.P.No.9948/2018) தொடரப்பட்டு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978-ன்படி முடிவு செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் உத்தரவு வரப்பெற்றது. மேற்படி உத்தரவிற்கெதிராக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி ஆணையருக்கெதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு (Writ Appeal) செய்ய மற்றும் வழக்காடுவதற்கு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.எம்.ஏழுமலை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு 30.04.2019 ம் தேதி மேல்முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மேல்முறையீட்டு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கு திரு.எம்.ஏழுமலை, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களின் 30.04.2019 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள தொகை ரூ.15,000/- ல் வருமான வரியாக ரூ.300/- (2%) ஐ அரசு கணக்கில் செலுத்த மற்றும் ரூ.14,700/- ஐ திரு.எம்.ஏழுமலை அரசு வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1233/2018/சி1.

13. இந்நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.ஜி.நமச்சிவாயம் என்பவர் பல்லாவரம் நகராட்சியில் பணியில் இருந்த போது முறைகேடாக சொத்து சேர்த்துள்ளதாகவும் இவர் பணியிலிருந்து 31.01.2011 ல் ஓய்வு பெறும் முன்பாகவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 26.01.2011 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதால் சம்மந்தப்பட்டவருக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படாததால் தனக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்க வேண்டி ஆணையருக்கெதிராக தொடரபட்ட வழக்கிற்கு (W.P.No.22248/18) 20.09.2018 ம் தேதிய சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பில் ஓய்வூதிய பயன்கள் 8 வார காலத்திற்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ந.க.எண்.52974/2010/ஏ1, நாள். 08.11.2018 ம் தேதிய கடிதத்தில் மேற்படி சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்பதால் சென்னை உயர்நீதி மன்ற சிறப்பு அரசு வழக்குரைஞர் திருமதி.ஏ.ஜெயந்தி அவர்கள் 09.11.2018 அன்று

உரிய ஆவணங்களுடன் நேரில் சந்தித்து மேல் முறையீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளதால் உரிய கோப்புகளுடன் 09.11.2018 அன்று சென்னை உயர்நீதி மன்ற சிறப்பு அரசு வழக்குரைஞர் திருமதி.ஏ.ஜெயந்தி அவர்களை நேரில் சந்தித்து உரிய விளக்கம் அளிக்கப்பட்டது.

சென்னை தலைமை செயலக அலுவலர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலகத்திலிருந்து அலுவலர்கள் மேற்படி அரசு வழக்குரைஞரிடம் விவரத்தினை தெரிவிக்கப்பட்டது. சென்னை உயர்நீதி மன்ற சிறப்பு அரசு வழக்குரைஞர் திருமதி.ஏ.ஜெயந்தி அவர்களின் 09.11.2018 ம் தேதிய சட்ட கருத்துருவில் (Legal Opinion) மேற்படி திரு.ஜி.நமச்சிவாயம், நகரமைப்பு அலுவலர் (த.ப.நீ) அவர்களுக்கு சேமநல நிதி மற்றும் சிறப்பு சேமநல நிதி தொகையை மட்டும் வழங்கலாம் என்றும் ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு தொகையை வழங்க இயலாது என்றும் அதற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் எனவும் குற்றசாட்டு குறிப்பானை உடனே வழங்கி உடன் விசாரணையை தொடங்கி முடிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழங்கப்பட்ட சட்டகருத்துருவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்ற சிறப்பு அரசு வழக்குரைஞர் திருமதி.ஏ.ஜெயந்தி அவர்களின் 12.11.2018 ம் தேதிய கடிதத்தில் மேற்படி சட்டகருத்துரு (Legal Opinion) வழங்கியதற்குண்டான கட்டணம் ரூ.10,000/-தை வழங்குமாறு தெரிவித்துள்ளதால் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.883/2010/சி1.

14. இந்நகராட்சியில் மின்பணியாளர் நிலை II ஆக பணியாற்றி வரும் திரு.ஜி.ரமேஷ்,. என்பவர் 15.05.1992 ம் தேதி மின் பணியாளர் நிலை II ஆக பணியில் சேர்ந்து எந்த வித குற்றமும் செய்யாமல் மாசற்ற பணி நிறைவு செய்துள்ளதால் 25 ஆண்டுகள் (15.05.1992 முதல் 14.05.2017 முடிய) முடிந்து விட்டதால் தனக்கு பரிசு தொகையாக ரூ.2000/- மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்குமாறு தனது விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

மேற்படி விண்ணப்பதினை பரிசீலனை செய்ததில் அரசாணை எண். G.O.(Ms) No. 390, நிதி(ஊதியம்) துறை நாள், 07.11.2012 மற்றும் அரசு கடிதம் எண்.64666 நிதி(BPF) 2012 நாள். 29.11.2012 ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் தற்போது மின்பணியாளர் நிலை II ஆக பணிபுரிந்து வரும் திரு.ஜி.ரமேஷ் என்பவர் நகராட்சி பணியில் சேர்ந்து 25 ஆண்டுகள் எந்த வித

குற்றத்திற்கும் உட்படாமல் மாசற்ற பணி நிறைவு செய்தமையால் அன்னாருக்கு ரூ.2,000/- மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அ.கு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1015/2017/சி1.

15. வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் சப்ளை செய்வதற்கு ஒவ்வொரு மாதம் சுமார் 12.00 இலட்சத்திற்கு மேல் (TWAD) நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ளதாலும், குடிநீர் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளதாலும் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையும் உடன் செலுத்த வேண்டியுள்ளதால், குடிநீர் கட்டணம் மற்றும் குழாய் வைப்புத்தொகை நிலுவை அதிகமாக உள்ள காரணத்தாலும் குடிநீர் நிதியின் நிதிநிலைமையை மேம்படுத்த வேண்டியும், நிலுவைத்தொகையினை வசூல் செய்ய குடிநீர் பராமரிப்பு பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கேட்பு அறிவிப்பு சார்வு செய்யவும், மேலும் குடிநீர் இணைப்பிற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்பு தொகையுடன் வசூல் செய்ய அஞ்சல் துறை மூலம் E-POST மூலம் 8500 குடிநீர் இணைப்புதாரர்களுக்கு ஒரு இணைப்பிற்கு ரூ.5/- வீதம் அனுப்பவும், அதற்குண்டான தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2243/17/இ2

16. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு ஓட்டுநராக பணியாற்றி வரும் திரு.க.கிருஷ்ணமூர்த்தி, என்பவர் கடந்த 28.03.2008 ல் ஓட்டுநராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வந்தததில் எந்த வித விபத்தும் ஏற்படுத்தாமலும் டீசல் சிக்கனம் செய்து பணியாற்றி வரும் நிலையில் ஓட்டுநராக பணியில் சேர்ந்து (28.03.2008 முதல் 27.03.2018 முடிய) 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதால் ரூ.500/- க்கு கிஸான் விகாஷ் பத்திரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ததில் அரசாணை எண். G.O.(Ms) No. 137 (P & AR) (J) Dept. நாள், 23.12.2014 ல் தெரிவித்துள்ளபடி, ஒரு ஓட்டுநர் தனது ஓட்டுநர் பணியில் எந்த வித புகார் மற்றும் விபத்துமின்றி 10 வருட பணி காலம் நிறைவடைந்ததற்கு ரூ.500/- க்கு கிஸான் விகாஷ் பத்திரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளதின்பேரில், திரு.க.கிருஷ்ணமூர்த்தி,

ஓட்டுநருக்கு ரூ.500/- க்கு கிஸான் விகாஷ் பத்திரம் (ம) பாராட்டு சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.540/2019/சி1

17. இந்நகராட்சியில் திரு.டி.சி.சசிகலா அசோகன் நகராட்சி ஒப்பந்தாரர் திட்ட பணிகள் வேலை செய்து வரும் நிலையில் வைப்புத்தொகை வழங்க கோரியதின் அடிப்படையில் அன்னார் கோரிய தொகை முழுவதும் கால கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் 2012-2013-ம் ஆண்டு முதல் 2013-14-ம் ஆண்டு வரை பில் தொகையில் பிடித்தம் செய்தவை ரூ.48,800/-ம் மற்றும் 2012-13-ம் ஆண்டு முதல் 2015-2016-ம் ஆண்டு வரை பட்டியியல் பிடித்தம் செய்த தொகை ரூ.1,09,044/- ஆக மொத்தம் ரூ.1,57,844/-யை காலம் கடந்த வைப்பு பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2273/2018/அ3

18. வாணியம்பாடி நகராட்சி ஜின்னாரோடு பகுதியில் புதியதாக கட்டபட்டுள்ள கடைகளுக்கு குத்தகை விளம்பரம் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்:534 நாள்:25.02.2019 ல் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட அளவில் தினத்தந்தி நாளிதழில் 01.03.2019–ம் தேதி புதிய கடை குத்தகை விளம்பரம் செய்யப்பட்டதற்கு அதனெதிரே உள்ள விளம்பரம் கட்டணம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பரம் நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | பட்டியல் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தினதந்தி நாளிதழ் | 01.03.2019 | VLR 1819-0013802 | ரூ.14843.00 |

அ.கு. :1. அனுமதிக்கலாம்.

2.இந்நகராட்சி பொது நிதியில் 2019-20 ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க எண் : 297/2019/அ1)**

19. இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் நகராட்சியில் சில தகவல்களை தினசரி நாளிதழில் வெளியிடவும், மேலும் பல தகவல்களை நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் தெரிந்துக்கொள்ள தினசரி நாளிதழ் 2019-2020-ம் வருடம் முழுவதும் வாங்க தோராய செலவினம் ரூ.25000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2789/2015/பி3

20. இந்நகராட்சிக்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள், படிவங்கள் பதிவேடுகள் மற்றும் புதிய கணக்கு முறை படிவங்கள் வேலூர் NAPCO அச்சகத்தின் மூலம் வாங்கிகொள்ளவும், அதற்கான தோராய செலவு ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள் வேலூர் NAPCO அச்சகத்தில் வாங்கிகொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2368/2019/பி3

21. வாணியம்பாடி நகராட்சி சாதாரண உள்ளாட்சி தேர்தலுக்கான இறுதி வாக்கு சாவடி பட்டியல் 14.05.2019-ம் தேதியன்று வெளியிடப்பட்டது. மேற்படி வாக்கு சாவடி பட்டியல்கள் அச்சிட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் கடித ந.க.எண்.1523/தே.பொ1/2019 நாள் : 30.04.2019 தேதிய கடிதத்தில் அச்சுக் கட்டணம் ஒரு பக்கத்திற்கு அச்சுக்கூலி மற்றும் காகித விலை உட்பட ரூ.0.60 பைசா எனவும் பைன்டிங் செய்ய ரூ.500/- எனவும் மேற்படி வாக்குசாவடி பட்டியல்கள் அச்சடிக்க நிர்ணயம் செய்த கட்டணங்களின்படி 29 பக்கம் கொண்ட 100 நகல்கள் அச்சடித்து கொடுத்தமைக்கு R.R.S.Infotech, வேலூர் அவர்கள் செலவினத் தொகை ரூ.2240/- வழங்க கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு :1. அவசரம் அவசியம் கருதி தேர்தல் ஆணையம் வழிகாட்டுதலின்படி வாக்குச்சாவடி பட்டியல் அச்சடித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தொகை ரூ.2240/-ஐ பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. தேர்தல் ஆணையத்தால், தேர்தல் நடத்தும் அலுவலர் நியமித்து உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகள் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்ற பொருள் வைக்கும் நிகழ்வு வரை மேற்கூறியவாறு தேர்தல் ஆய்த்த பணிகள் செய்ய தேவைப்படும் செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.15000/- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.216/2019/எப்1,**

22. இந்நகராட்சியில் 2018-19 ம் ஆண்டு தணிக்கை நடைபெற உள்ளதால் தணிக்கை நடைபெற்று முடியும் வரை வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிக்கான ஆண்டு கணக்கு தயார் செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, வேலூார் அவர்களுக்கு சமர்ப்பிக்கும் வரை மேற்படி ஆண்டு கணக்கு தயார் செய்யும் பணியை மேற்கொள்ள திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி, கன்சல்டென்ட் அவர்களின் 09.05.2019 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி ரூ.40,000/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | : | மேற்படி தொகையை பொது நிதி 2019-20 ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்.1681/2014/பி1

23. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட அனைத்து பகுதியில் இருந்து குப்பைகளை அப்புறப்படுத்தி நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் குப்பைகள் சேமிக்கப்பட்டு வருகிறது. நகர குப்பைகளை உரக்கிடங்கில் எடுத்து செல்ல வழித்தடம் இல்லை, எனவே உரக்கிடங்கில் வழித்தடம் செய்யும் பணிக்கு ஹிட்டாச்சி மற்றும் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் டிப்பர் லாரி கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்தி வழித்தடம் செய்யும் பணிக்கு தோராய செலவினத்தொகை ரூ.3.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1.அனுமதிக்கலாம்

2.பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் நிர்வாக அனுமதி எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 844/2019/எச்1,

24. இந்நகராட்சியில் 2019-2020-ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்கு (SCHEME ONLY) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (E-Tender) மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் விளம்பரம் செய்ய தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களுக்கு விளம்பரங்கள் செய்யும் கட்டணம் அந்தந்த நிறுவனத்திடம் வரப்பெறும் பட்டியல் தொகைகள் வழங்க தோராய செலவினம் தொகை ரூ.15,00,000/-யை பொது நிதி 2019-2020-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றப் பொருள் ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.404/2019/இ1.

25. இந்நகராட்சியில் 15.08.2018 ம் சுதந்திர தின விழா மற்றும் 26.01.2019 ம் தேதி குடியரசு தினவிழாவை யொட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் மூலம் தேசிய கொடி ஏற்றி வைக்க இவ்விழாவிற்கு அழைப்பிதழ் அனைவருக்கும் அனுப்ப வேண்டி முறையாக இரண்டு விழாவிற்கும் 100 பிரதிகள் வி.எம்.ஜெ பிரிண்டர்ஸ், வாணியம்பாடி அவர்கள் கீழ் கண்டவாறு தயார் செய்து கொடுத்துள்ளார்.

1.ஆகஸ்டு 2018 - 100 நகல்கள் = ரூ.1550/-

2. ஜனவரி 2019 - 100 நகல்கள் = ரூ.2500/-

-----------

ரூ.4050/-

-----------

மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு 1. வி.எம்.ஜெ பிரிண்டர்ஸ், வாணியம்பாடி என்பவர் அழைப்பிதழ் தயார் செய்ததற்குண்டான தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.155/2013/சி1

26. நகரமன்ற தீர்மானம் எண்:543 நாள்:25.02.2019 தீர்மானத்தின் படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் தீ பிடித்துவிட்டதால் தீயணைப்பு ஊர்திகான தண்ணீர் தனியாரிடமிருந்து டிராக்டர் வாகனத்தில் தண்ணீர் சப்ளை செய்யும் பணிக்கு 27.02.2019 தேதியன்று வரபெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விவரம் | தண்ணீர் சப்ளை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | எம்.ஆர்.வி. வாட்டர் சப்ளையர்ஸ் | நடை ஒன்றுக்கு | 350.00 |
| 2 | எம்.ஆர்.வெங்கடேசன் வாட்டர் சப்ளையர்ஸ் | நடை ஒன்றுக்கு | 375.00 |

அ.கு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்: 1 ல் உள்ள எம்.ஆர்.வி.வாட்டர் சப்ளையர்ஸ் குறைவாக கொடுத்துள்ள விலைபுள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை உடனடியாக செய்து முடிக்கவேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் : 333/2019/எச்1

27. வாணியம்பாடி பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 27.02.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளுக்கும் சாய்வு தளம் நடைபாதை அமைக்கும் பணி. | 2.00 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.50% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 27.02.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.202/2019/இ1.

28. வாணியம்பாடி பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 05.03.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2-ல் காதர் உசேன் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 10.00 | 1) எஸ்.தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.50% அதிகம் |
| 2 | வார்டு எண்.2 காதர் உசேன் தெரு மற்றும் வார்டு எண்.3 உசேன் முகமது தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி. | 10.00 | 1) எஸ்.தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% அதிகம் |
| 3 | வளையாம்பட்டு உரக்கிடங்கில் 60000 லிட்டர் OHT கட்டுதல் மற்றும் பைப்லைன் அமைக்கும் பணி. | 10.00 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வார்டு எண்.36-ல் திருமாஞ்சோலை சமூக கழிப்பிடம் அருகில் மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி. | 7.50 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.20% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 05.03.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.284/2019/இ1.

29. வாணியம்பாடி கல்வி நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 05.03.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32-ல் காந்தி நகர், நகராட்சி முஸ்லீம் (உருது) மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டும் பணி. | 8.00 | 1) ஜி.என்.விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) வி.பி.முருகன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% அதிகம் |
| 2 | வார்டு எண்.32-ல் காந்தி நகர், இஸ்லாமியா கல்லூரி சாலை, நகராட்சி இந்து மேல்நிலைப் பள்ளியில் வகுப்பு அறைகளுக்கு பராமரிப்பு மற்றும் வண்ணம் பூசுதல் பணி மேற்கொள்ளுதல். | 5.00 | 1) ஜி.என்.விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) வி.பி.முருகன் | மதிப்பீட்டு தொகையை விட 1.10% அதிகம் |
| 3 | நேதாஜி நகர்(வடக்கு), நகராட்சி இந்து நடுநிலைப் பள்ளியில் வகுப்பு அறைகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.50 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.30% அதிகம் |

அ.கு : 1) கல்வி நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 05.03.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.284/2019/இ1.

30. வாணியம்பாடி பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள 08.03.2019-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.15-ல் சலாமாபாத் குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி. | 10.00 | 1) எஸ். தாமோதரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.20% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 08.03.2019-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.305/2019/இ1.

31. இந்நகராட்சியில் 2018-19 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கையை (Administration Report) தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.555/2019/சி1

32. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட அனைத்து பகுதியில் இருந்து குப்பைகளை அப்புறப்படுத்தி நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் குப்பைகள் சேமிக்கப்பட்டு வருகிறது. அன்றாட குப்பைகளின் அளவை கண்டறிய 5 கோட்டத்திற்கு எடை பார்க்கும் இயந்திரம் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கி கொள்ளவதற்கு அதற்கான தோராய செலவினம் ரூ.6500/-ஐ செலவினத்திற்கும் மற்றும் நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:அனுமதிக்கலாம்

ந.க.எண் : 842/2019/எச்1,

33. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பட்டு உரக்கிடங்கில் குப்பை வாகனங்கள் உள்ளே செல்ல வழித்தடம் இல்லை, எனவே உரக்கிடங்கில் வழித்தடம் செய்யும் பணிக்கு ஹிட்டாச்சி மற்றும் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் குப்பைகளை அப்புறப்படுத்தி வழித்தடம் செய்யும் பணிக்கு 08.05.2019 தேதியன்று வரபெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விவரம் | ஜே.சி.பி. இயந்திரம் 1 மணி நேரத்திற்கு | ஹிட்டாச்சி இயந்திரம் 1 மணி நேரத்திற்கு | மொத்தம் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கிரீன் சொசியாலிட்டி | 900.00 | 1950.00 | 2850.00 |
| 2 | பநீ சீனிவாசா எண்டர்பிரைஸஸ் | 1000.00 | 2050.00 | 3050.00 |
| 3 | பநீ சாய் ஏஜென்சிஸ் | 960.00 | 2100.00 | 3060.00 |

அ.கு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்: 1ல் உள்ள கிரீன் சொசியாலிட்டி குறைவாக கொடுத்துள்ள விலைபுள்ளியை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை உடனடியாக செய்து முடிக்கவேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் : 844/2019/எச்1

34. வாணியம்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவறை இல்லாத வீடுகளுக்கு கழிவறை கட்ட 2018-2019 ஆம் ஆண்டுக்கான 919 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் தனி நபர் மூலம் 664 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் நிலுவையில் உள்ள 255 தனி நபர் கழிவறை கட்ட பொது மக்கள் முன்வராத காரணத்தால் நகராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர் தவிர்த்து தனியார் மூலம் கீழ் காணும் ஒப்பந்ததாரர்கள் மூலம் தனி நபர் கழிவறை கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கழிவறை எண்ணிக்கை | தொகை ரு. |
|---|---|---|---|
| 1 | திரு.ஏழுமலை, | 129X8000 | 1032000.00 |
| 2 | திரு.ராஜா, | 32X8000 | 256000.00 |
| 3 | திரு.ரவீந்தர் ராவ், | 55X8000 | 440000.00 |
| 4 | திரு. ஹரிகரன், | 25X8000 | 200000.00 |
| 5 | திரு.ஜோசப்செல்வகுமார், | 6X8000 | 48000.00 |
| 6 | திரு.மகேந்திரன் | 4X8000 | 32000.00 |
| 7 | திரு. சிவக்குமார் | 4X8000 | 32000.00 |
| | மொத்தம் | 255X8000 | 2040000.00 |

மேற்கண்ட தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு தனிநபர் கழிவறை கட்டிடம் கட்ட பணிஉத்தரவு மற்றும் அதற்கான தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி தனி நபர்கள் கழிவறை கட்டும் பணி தனி நபர் ஒப்பந்ததாரர் மூலம் 255 கழிவறைகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் :2742/2015/எச்1

35. திரு.சி.ஆறுமுகம், வேலூர் என்பவரின் 19.04.2019 ம் தேதிய கடிதத்தில் தான் வாணியம்பாடி நகராட்சியில் சுகாதார உதவியாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளராக 10.01.1979 முதல் 09.07.1998 வரை பணியாற்றியுள்ளதாகவும் தான் பணி செய்த காலத்தில் தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்தது தவறு என்றும் ரூ.8054/- ஐ நகராட்சியில் செலுத்துமாறும் தணிக்கை தடை எண்.36(இ) 1989-90 ல் சுட்டிகாட்டப்பட்டது என்றும் தான் குடியாத்தம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு அலுவலராக பணியாற்றி வயது முதிர்வு காரணமாக 30.11.2011 ல் ஓய்வு பெறுவதற்கு தடையில்லாசான்று கோரப்பட்டபோது மேற்குறிப்பிட்ட தணிக்கை தடை உள்ளது என்றும் மேற்படி தொகையை செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.8054/- ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டதாகவும் 06.07.2011 ல் தான் தடையில்லாசான்று பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

MAWSD, Chennai Letter (D) No.707 dated 09.12.2015 & நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் ந.க.எண்.21275/J1/2012-2, நாள். 29.01.2016 ஆகியோர் கடிதங்களில் 01.06.1988-க்கு பிறகு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்தது தவறு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தான் 11.01.1989 ல் தேர்வு நிலை மற்றும் 11.01.1999 ல் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்தது சரி என்றும் மேற்படி தொகை ரூ.8054/- ஐ வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையை திரு.சி.ஆறுமுகம், துப்புரவு அலுவலர் (ஓய்வு) அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு 1. மேற்படி தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2019-20 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.557/2019/சி1

தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ)